| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **165/2014** |
| **DATE** | : | **20.11.2024** |
| **NAME** | : | **சந்திரசேகரன்** |
| **FATHER'S NAME** | : | **தயாளன்** |

**வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு என்ன ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் பசலி தாக்கல் செய்திருக்கிறேன். எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை மேற்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் 2003 ம் வருடத்தில் இருந்து தாக்கல் செய்திருக்கிறேன் எந்த வருடம் வரை தாக்கல் செய்திருக்கிறேன் என்று எனக்கு நினைவில்லை. எனது மூதாதையருடன் 60 வருடமான அந்த இடத்தில் பயிர் செய்து வருவதாக தெரிவித்திருக்கிறேன் அதனை காட்டுவதற்கான வரி ரசீது அல்லது வேறு ஏதாவது வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. பூர்வீகமாக அதனை அனுபவித்து வந்தோம். என் தகப்பனார் பெயருக்கு பட்டா எந்த வருடம் மாற்றப்பட்டது என்றால் 2003 ம் வருடம் என் தந்தை பெயருக்கு மாற்றப்பட்டது. அதற்கு முன்பு வரை அது அரசு நிலமா அல்லது பூர்வீக பட்டா சொத்தா என்றால் பூர்வீக பட்டா சொத்து ஆகும். பூர்வீக பட்டா என்றால் என் மூதாதையர் பெயரில் உள்ள அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தை பெயருக்கு யூடியார் ஸ்கீம் அடிப்படையில் தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட நான் குறிப்பிட்ட ஆவணங்களை தவிர எங்களுக்கு உரிமையானது என்பதை காட்டுவதற்கான கிரைய ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அடங்கலும், பசலியும் குறிப்பிட்ட இடத்தில் யார் பயிர் செய்தார்கள் என்பதை காட்டுவதற்காக கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அந்த சொத்தின் உரிமையாளர் என்பதை காட்டுவதற்காக அவை கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா சொத்து குறித்து நான் வில்லங்க ஆவணம் ஏதேனும் எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து மானாவரி புஞ்சை நிலம் என்று குறிப்பிட்டிருக்கிறேன் அவ்வாறு மானாவரி புஞ்சை நிலம் என்று காட்டுவதற்கு என் மூதாதையர் காலத்தில் செலுத்தப்பட்ட வரி ரசீது ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை என் தந்தை பெயரில் உள்ள ரசீது தான் தாக்கல் செய்திருக்கிறேன். சீனுவாச நாயுடு, ஆதிகேசவ நாயுடுவை எனக்கு தெரியாது என் தந்தைக்கு தான் தெரியும். நாராயணி அம்மாளை தெரியும். அவர் எனக்கு பெரிய பாட்டி ஆவார். நாராயணி அம்மாள் தான் தாவா இடத்தை சீனுவாச நாயுடு, ஆதிகேசவ நாயுடு ஆகியோரிடம் இருந்து 1935 ம் வருடம் கிரையம் வாங்கினார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1935 ம்

ஆண்டில் இருந்து நாராயணி அம்மாள் தான் தாவா சொத்தை பட்டா அவர் பெயருக்கு மாற்றப்பட்டு அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்த வரை எனது தாத்தா தான் அனுபவித்து வந்தார். நாராயணி அம்மாள் தான் 1984 ம் ஆண்டில் 1 வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஆவணம் போலியாக தாயாரிக்கப்பட்ட ஆவணம் ஆகும். 1984 ம் வருடத்தில் இருந்து 1 ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவித்து பயிர் செய்து வருகிறார் என்றாலும், 1 ம் பிரதிவாதி தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்றால் சரியல்ல. 1984 ம் வருடம் தாவா இடத்தில் நாங்கள் தான் கிணறு எடுத்து பம்ப்செட் வைத்து அனுபவித்து வந்தோம். 2008 ம் ஆண்டில் 1 வது பிரதிவாதி, ஆனந்தன் என்பவரை தாவா இடத்தை பயிர் செய்வதற்காக குத்தகைக்கு விட்டிருந்தார் என்றால் சரியல்ல. 2008 ம் வருடத்தில் இருந்து ஆனந்தன் என்பவர் தான் தாவா சொத்தை குத்தகைக்கு எடுத்து பயிர் செய்து வருகிறார் என்றாலும் 2013 ம் வருடம் நாங்கள் அடி ஆட்களை வைத்து அவர் பயிர் செய்து வருவதை தடுத்தோம் என்றால் சரியல்ல. ஆனந்தன் என்பவர் யார் என்றே எனக்கு தெரியாது. அவர்கள் தாவா இடம் பக்கம் வந்ததே இல்லை. நான் தகராறு செய்ததால் என் பெயரிலும் என் தந்தை பெயரிலும் வாலாஜாபாத் காவல் நிலையத்தில் 1 ம் பிரதிவாதி நாகேஷ்வர ராவ் புகார் கொடுத்தார் என்றால் என் தந்தை பெயரில் அவ்வாறு புகார் கொடுத்தார். அந்த புகாரின் பெயரில் வாலாஜாபாத் காவல் நிலையத்தார் என்ன நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எங்களுக்கு வழங்கப்பட்ட யூடியார் பட்டா எண். 377 யை ரத்து செய்வதற்கு 1 ம் பிரதிவாதி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்த பின்பு என் தந்தை என் பெயருக்கு தாவா சொத்து குறித்து ஏதாவது ஆவணம் எழுதி வைத்தாரா என்றால் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். 10.06.2015 ம் தேதி 1 ம் வாதி 4 ம் வாதி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவண எண். 3239/2015 எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததை குறித்து நான் தாவாவை திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் போலியான ஆவணங்கள் தயார் செய்திருப்பதாக நான் எவ்வாறு எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் எனது மூதாதையர்கள் தான் தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் அதன் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறேன். தாவா சொத்தானது நாராயணி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அவருக்கு பிறகு பிரதிவாதிகளுக்கு தான் சொந்தமானது என்றாலும் சரியல்ல. 1 ம் பிரதிவாதி மற்றும் நாராயணி அம்மாள் யாரும் தாவா சொத்து பக்கம் வந்ததில்லை. 4 ம் பிரதிவாதி காஞ்சிபுரம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 131/2021 யை என் தந்தை என் பெயருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு பிரதிவாதிகள் அந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள். தாவா சொத்தின் எந்த காலகட்டத்திலும் நாங்கள் பயிர் செய்யவில்லை என்றாலும் தாவா சொத்து

பிரதிவாதிகளுக்கு உரிமையானது என்றால் சரியல்ல. தற்போது வரை நான் தான் பயிர் செய்து வருகிறேன். யூடியார் பட்டா என் தந்தை பெயருக்கு வழங்கப்பட்டதன் அடிப்படையில் சொத்தின் உரிமையாளர் நான் என்று உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. சொத்தை பயிர் வைப்பதால் சொத்தின் உரிமையாளார் என்று எங்களை கருத இயலாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக போலியாக தாயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. 1935ம் வருடத்தில் இருந்து தாவா சொத்தை பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் எனவே பிரதிவாதிகள் தான் தாவா சொத்தின் உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(S/d.R.Rajeswari)
Principal District Munsif,
Kancheepuram.